செய்தி வெளியீடு எண்: 003/2017 நாள்: 02.01.2017

**வேலூர் மாவட்ட அளவிலான மின்னணு பணபரிவர்த்தனை தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் 03.01.2017 மற்றும் 04.01.2017 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.**

வேலூர் மாவட்ட ஏலகிரி அரங்கில் மாவட்ட அளவிலான மின்னணு பண பரிவர்த்தனை தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் 03.01.2017 மற்றும் 04.01.2017 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (திட்ட இயக்குநர்) திரு.பெரியசாமி அவர்களும் துவக்கி வைக்கவுள்ளனர்.

இக்கூட்டத்தில் ஏ.டி.எம். கார்டு, கிரெடிட் கார்டு, ப்ரீபெய்டு கார்டு, ஸ்வைபிங் கருவிகளின் செயல்பாடுகள் குறித்து விரிவாக விளக்கப்படவுள்ளது. மேலும் இணையதளம், அலைபேசி, செயலிகள், USSB, UPI மூலம் பணபரிவர்த்தனைகள் மேற்கொள்வது குறித்து விவரிக்கப்படவுள்ளது. ஆதார் எண்ணின் மூலம் பணபரிவர்த்தனை மேற்கொள்ள புதியதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள BHIM என்கிற செயலியின் செயல்முறை விளக்கமும் நடைபெறவுள்ளது. இப்பயிற்சிகள் மாவட்ட அளவில் உள்ள வங்கியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சியடைந்தவர்கள் வட்டார அளவிலும் ஊராட்சி ஒன்றிய அளவிலும் பயிற்சி அளித்து அதன் வாயிலாக பொது மக்களுக்கு சென்றடைய திட்டமிடப்பட்டுள்ளது.

வெளியீடு:

02/01/17

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.

மேலும் விவரங்களுக்கு:
94425
04412